FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319466

1. District : Madurai PS: V & AC Year: 2026 FIR No.: 04/2026 Date: 26.05.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by Prevention of corruption (Amendment) Act 2018. Sections பிரிவுகள்: U/s 7(a) of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 16.04.2026 at 1200hrs Date to : After 2013 days to 16.04.2026 at 12:30hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : 06.05.2026 at 10.30hrs. Time to : 25.05.2026 at 12.45hrs.
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 26.05.2026 Time : 0745 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 26.05.2026 Time : 08.30 hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Typed complaint
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: South, 25 kms
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : o/o The Commissioner, Thirumangalam municipality, madurai District.
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. A. Nagarajan (b) Father's/ Husband's Name : Alagarsamy
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 1.6.1946 (d) Nationality : Indian (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : — Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Village level worker, Agri Dept. (g) Address : Plot. No 6, 5th cross st, Sankaradass Swamygal nagar, Laws Pet (Post) Puducherry - 605008.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) Tr. Kishorekumar, Bill collector, ward. No. 6, o/o The Commissioner, Thirumangalam municipality, madurai District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet attached Pages 3 to 7

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

26.05.2026.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 26.05.2026 09.40 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K. Kumaraguru,
Rank: நிலை Inspector of Police, WAC, Madurai.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 26.05.2026-ஆம் தேதி காலை 07.45 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்த போது, புதுச்சேரி, இலாஸ்பேட் போஸ்ட், சங்கரதாஸ் சுவாமிகள் நகர், 5-வது குறுக்கு தெரு, பிளாட் எண் 6 என்ற முகவரியைச் சேர்ந்த அழகர்சாமி மகன் திரு.நாகராஜன் என்பவர் நிலையம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் திரு.A.நாகராஜன், த/பெ. அழகர்சாமி, பிளாட் எண் 6, 5-வது குறுக்கு தெரு, சங்கரதாஸ் சுவாமிகள் நகர், இலாஸ்பேட் போஸ்ட், புதுச்சேரி - 605008. பெறுநர் உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, மதுரை. அய்யா, நான் புதுச்சேரி, இலாஸ்பேட்டில் உள்ள சங்கரதாஸ் சுவாமிகள் நகரில் நானும் எனது மனைவியும் குடியிருந்து வருகிறோம். நான் கிராம நல ஊழியராக (Village Level Worker) வேளாண் துறையில் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாக வேலைக்குச் சேர்ந்து, கடந்த 2006-ஆம் ஆண்டு மே மாதம் வேளாண் அலுவலராக பணி ஓய்வு பெற்றேன். எனது மகன் வெளிநாட்டில் தனியார் நிறுவனத்தில் IT ஊழியராக பணிபுரிந்து வருகிறார். எனது தாத்தா நாகையாசாமி அவர்களின் பூர்வீகம் மதுரை மாவட்டம் திருமங்கலம் ஆகும். நாங்கள் பாண்டிச்சேரியிலிருந்து திருமங்கலத்திற்கு குடி வர முடிவு செய்து, கடந்த, 08.11.2024 ஆம் தேதி திருமங்கலம், சின்னவடகரை, செந்தூர் நகரைச் சேர்ந்த திரு.A.சோலைமலை என்பவரிடமிருந்து மதுரை மாவட்டம், திருமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட பழைய வார்டு எண் 3, தற்போது புதிய வார்டு எண் 6, ஜவஹர் நகர், 7 வது தெரு, மறவன்குளம் கிராமம், சர்வே எண் 10/4, ரீ சர்வே எண் 10/17ல் கட்டுப்பட்டதும், திருமங்கலம் வீடு கட்டும் சொசைட்டி ஏ1998 ன்படி கட்டுப்பட்ட பிளாட் எண் 87 ல் உள்ள 4275 சதுரடியில் உள்ள காலிமனையிடத்தை எனது மனைவி திருமதி.N.விஜயலட்சுமி பெயரில் திருமங்கலம் சார்-பதிவாளர் அலுவலக ஆவண எண். 8683/2024-ன் படி கிரையம் முடித்தோம். நான் அந்த காலிமனையை வாங்குவதற்கு முன்பு அந்த இடத்தில் வீடு இருந்தது. அந்த வீடு இடிக்கப்பட்டு விட்டது. அதற்கான பழைய சொத்து வரி விதிப்பு எண். 117/5345 ஆகும். அது திரு.முத்தையா அவர்கள் பெயரில் உள்ளது. திரு. முத்தையா அவர்கள் திரு.சோலைமலை அவர்களுக்கு முந்தைய உரிமையாளர் ஆவார். அதன் புதிய வரி விதிப்பு எண். 117/014/900756 ஆகும். அதுவும் திரு. முத்தையா பெயரில்தான் உள்ளது. நான் வாங்கிய இந்த காலிமனையில் தரைத்தளம் கொண்ட வீடு கட்டுவதற்கு திருமங்கலம் நகராட்சி ஆணையர் அலுவலகத்தில் எனது மனைவி விஜயலட்சுமி பெயரில்

10.02.2025-ஆம் தேதி திட்ட அனுமதி கேட்டு விண்ணப்பித்து, திட்ட அனுமதி எண். 117/BL/2025/00017, நாள்: 26.02.2025-ன் படி உத்தரவு பெற்றேன். நான் அங்கு வீடு கட்டி முடித்தப்பின்னர், கடந்த 10.04.2026-ஆம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு திருமங்கலம் நகராட்சி அலுவலகத்திற்குச் சென்று எங்கள் பகுதி பில் கலெக்டர் திரு. கிஷோர்குமார் அவர்களை சந்தித்து, புதிய சொத்து வரி நிர்ணயம் செய்வது சம்பந்தமாக கேட்டேன். அதற்கு திரு.கிஷோர்குமார் அவர்கள் திருமங்கலம் நகராட்சி, புதிய சொத்து வரி விதிப்பு கோரும் விண்ணப்ப படிவ எண். 0432 என்ற விண்ணப்பத்தை என்னிடம் கொடுத்து விட்டு, ஒரு பேப்பரில் 1. பத்திரம், 2. EC, 3. Plan, 4. முத்தையா நாடார் (Property Tax Receipt), 2025-2026 ஆண்டிற்கு ரூ.13,952/- + 2026-2027 Ist Half-க்கு ரூ.6,976/- என்றும், 2.89 X 1,400/- என்றும் தனது பெயரையும், கைப்பேசி எண் 8056637810 என எழுதி என்னிடம் கொடுத்து விட்டு, பழைய உரிமையாளர் திரு.முத்தையா பெயரிலுள்ள சொத்து வரி நிலுவைத் தொகையினை செலுத்தி, அந்த இரசீதை விண்ணப்பத்துடன் இணைத்து என்னிடம் கொடுங்கள் என்றும் தேவைப்பட்டால் செல்போனில் பேசும்படி கூறினார். பின்னர் நான் அந்த விண்ணப்பத்தை பூர்த்தி செய்து, அதில் எனது மனைவியிடம் கையொப்பம் பெற்று, கடந்த 15.04.2026-ஆம் தேதியன்று மாலை சுமார் 4 ¾ மணிக்கு திரு.கிஷோர்குமார் அவர்களை எனது கைப்பேசி எண். 8903653908 என்ற எண்ணிலிருந்து அவருடைய கைபேசியில் தொடர்பு கொண்டு, விண்ணப்பத்தை நாளைக்கு (16.04.2026) கொண்டு வந்து கொடுக்கலாமா என்று கேட்டேன். அதற்கு அவரும் சரியென்றார். அதன்படி மறுநாள் 16.04.2026-ஆம் தேதியன்று மதியம் சுமார் 12.00 மணிக்கு நான் திருமங்கலம் நகராட்சி அலுவலகத்தில் திரு.முத்தையா பெயரில் நிலுவையிலுள்ள 2025-2026 மற்றும் 2026-2027 ஆகிய ஆண்டுகளுக்கு சொத்து வரியாக ரூ.20,988/-மும், குடிநீர் கட்டணமான ரூ.2,350/-மும் செலுத்தி, இரசீது எண். 117/TAX/02/26-27/0000452, 0000455, 00000456-ன் படி இரசீதுகள் பெற்றேன். அன்றைய தினமே அந்த மூன்று இரசீதுகள், கிரைய ஆவணம், EC, Plan Approval ஆகிய நகல்களை எனது மனைவி பெயரிலுள்ள விண்ணப்பத்துடன் இணைத்து திரு.கிஷோர்குமார் அவர்களிடம் கொடுத்தேன். அவர் எனது விண்ணப்பத்தை சரி பார்த்து விட்டு, விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை எடுத்து, சொத்து வரி நிர்ணயம் செய்து, கிடைக்க ஏற்பாடு செய்து தர மொத்தம் ரூ.15,000/- செலவாகும் என்று என்னிடம் கூறினார். அதற்கு நான் அந்த பணம் சொத்து வரிக்கான கட்டணமா என்று கேட்டேன். அதற்கு திரு.கிஷோர்குமார் அவர்கள் என்னிடம், சொத்து வரிக்கான கட்டணத்தை நிர்ணயம் செய்த பின்னர்தான் கட்ட வேண்டும் என்றும், மேலும் அவர்தான் எங்களது விண்ணப்பத்தினை கணினியில் பதிவு செய்ய வேண்டும் என்றும், அவர் கேட்கும் பணம்

ரூ.15,000/- அவரது அலுவலக செலவிற்காக அவருக்கு தரவேண்டும் என்றும் அப்போது கூறினார். நானும் அவரிடம், சரி சார் பார்த்து செய்யுங்கள் என்று கூறிவிட்டு வந்து விட்டேன். நான் திரு.கிஷோர்குமார் அவர்கள் பணம் கேட்கும் விபரத்தை எனது மனைவியிடம் தெரிவித்தேன். அவரும் வருத்தப்பட்டார். பின்னர் இரண்டு, மூன்று நாட்கள் கழித்து, மதியம் சுமார் 12 ½ மணிக்கு திரு.கிஷோர்குமார் அவர்கள் எனது புதிய வீட்டிற்கு வந்து, அதனை பார்வையிட்டு, என்னை வீட்டுடன் சேர்த்து போட்டோ எடுத்து விட்டு, அவர் கேட்ட பணம் ரூ.15,000/- என்னாச்சு என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான் அவரிடம், பணமில்லாமல் வேலையை செய்ய முடியுமா என்று கேட்டேன். அதற்கு திரு.கிஷோர்குமார் அவர்கள் பணம் கொடுத்தால்தான் வேலை முடியும் என்று என்னிடம் கோபமாக கூறி, மேலும் அவர் சொன்ன பணத்துடன் வந்தால் உடனே வேலையை முடித்து தருவேன் என்று கூறி சென்று விட்டார். பின்னர் தேர்தல் நேரம் என்பதால் நான் பாண்டிச்சேரிக்குச் சென்று விட்டேன். பின்னர் 06.05.2026-ஆம் தேதியன்று காலை 10 ½ மணிக்கு நான் மதுரை திருமங்கலம் நகராட்சி அலுவலகத்திற்கு சென்று திரு.கிஷோர்குமார் அவர்களை சந்தித்து, அவரிடம் எனது மனைவி பெயரிலுள்ள உள்ள சொத்து வரி விண்ணப்ப நிலை குறித்து கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் நான் ஏற்கனவே கேட்ட பணம் ரூ.15,000/- கொண்டு வந்துள்ளீர்களா என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம், நான் கட்டிய வீட்டிற்கு சின்னச் சின்ன வேலைகள் பார்த்துக் கொண்டிருக்கிறேன், ஆகையால் தற்போது என்னிடம் பணம் இல்லை என்று கூறினேன். அதற்கு அவர் என்னிடம், பணத்தை ஏற்பாடு செய்துவிட்டு என்னை வந்து பாருங்கள், சும்மா சும்மா வராதீர்கள் என்று கூறி அனுப்பி வைத்தார். அதன் பின்னர் நான் கட்டிய வீட்டிற்கான புதுமனை புகுவிழாவை கடந்த 18.05.2026-ஆம் தேதியன்று நடத்தி முடித்தேன். பின்னர் பாண்டிச்சேரி சென்று, எனது மனைவியை அங்கு விட்டு விட்டேன். பின்பு நேற்று (25.05.2026) காலை சுமார் 11 ¾ மணிக்கு நான் திருமங்கலம் நகராட்சி அலுவலகத்திற்கு சென்று, திரு.கிஷோர்குமார் அவர்களை சந்தித்தேன். அப்போது அவர் என்னிடம், அவர் முக்கிய அலுவலில் இருப்பதாகவும், அதன் காரணமாக என்னை ஒரு மணி நேரம் கழித்து வாச்சொன்னார். அதன்படி நான் மதியம் சுமார் 12 ¾ மணிக்கு மீண்டும் அங்கு சென்று திரு.கிஷோர்குமார் அவர்களை சந்தித்து, எனது மனைவி பெயரிலுள்ள விண்ணப்பத்தின் மீது பணமில்லாமல் நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாக கேட்டேன். அதற்கு அவர் கோபபட்டு, நான் பலமுறை கூறிவிட்டேன், நான் கேட்ட பணம் ரூ.15,000/- கொடுத்தால்தான் உங்களுக்கான விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை எடுக்க முடியும், இல்லையென்றால் நீங்கள் அலைந்து கொண்டுதான் இருக்க வேண்டும் என்று கூறி, அவர் கேட்ட பணம் ரூ.15,000/-த்தை நாளை (26.05.2026) காலை திருமங்கலம்

நகராட்சி அலுவலகத்திற்கு வந்து அவரை சந்தித்து கொடுக்க வேண்டும் என்றும், தான் அலுவலகத்தில் இல்லையென்றால் போன் செய்யும் படியும் கண்டிப்பாக கூறிவிட்டார். நான் வீட்டிற்கு வந்து, எனது மனைவி விஜயலட்சுமியிடம் தெரிவித்தேன். அதற்கு அவர், என்னை இந்த வயதிலும், பணம் கேட்டு, கடந்த 1½ மாதமாக வேலையை செய்யாமல், அலைய வைத்துக் கொண்டு இருக்கிறாரே என கூறி என்னிடம் வருத்தப்பட்டார். தனது கடமையை செய்ய பில் கலெக்டர் திரு.கிஷோர்குமார் அவர்களுக்கு லஞ்சம் கொடுக்க எங்களுக்கு விருப்பம் இல்லை. நாங்கள் இது சம்பந்தமாக லஞ்ச ஒழிப்புத் துறையில் புகார் கொடுக்க முடிவு செய்தோம். அதன்படி நான் புகார் மனு ஒன்றை தயார் செய்தேன். அதில் எனது மனைவி விஜயலட்சுமி பெயரில் சொத்து வரி நிர்ணயம் செய்வதற்கு, பரிந்துரை செய்து, ஏற்பாடு செய்து தருவதற்கு, என்னிடம் ரூ.15,000/- லஞ்சம் கேட்கும் திருமங்கலம் நகராட்சி வார்டு எண். 6 பில்கலெக்டர் திரு.கிஷோர்குமார் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும் குறிப்பிட்டு இருந்தேன். அத்துடன் எனது மனைவி பெயரிலுள்ள விண்ணப்ப படிவ எண். 0432, திரு.கிஷோர்குமார் அவர்கள் கைப்பட எழுதிய பேப்பர், திருமங்கலம் நகராட்சி அலுவலக திட்ட அனுமதி உத்தரவு எண். 117/BL/2025/00017, நாள்: 26.02.2025, எனது மனைவி பெயரிலுள்ள கிரைய ஆவண எண். 8683/2024, இந்த இடத்திற்கான வில்லங்கச்சான்று, பழைய உரிமையாளர் திரு.முத்தையா நாடார் பெயரிலுள்ள சொத்து வரி இரசீது எண். 117/TAX/02/26-27/0000455, குடிநீர் கட்டண இரசீது எண். 117/TAX/02/26-27/0000456, 117/TAX/02/26-27/0000452 ஆகியவற்றின் நகல்களை இணைத்துள்ளேன். மேலும் பில்கலெக்டர் திரு.கிஷோர்குமார் அவர்கள் கேட்ட லஞ்சப்பணம் ரூ.15,000/-ஐயும் கொண்டு வந்துள்ளேன். அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன். இப்படிக்கு XXXXXX (A.நாகராஜன்) 26/05/2026.

Sir, Received the complaint on 26.05.2026 at 07.45 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti-Corruption, Chennai and registered a case in Madurai Vigilance and Anti-Corruption Cr.No. 04/2026 u/s 7(a) of

PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 08.30 hrs and took up investigation. Sd./-XXXX (K.Kumaraguru) 26.05.2026, Inspector of Police, V & AC, Madurai.

Original FIR along with original typed complaint of Tr.A.Nagarajan, S/o.Alagarsamy, Plot No.6, 5th Cross Street, Sankaradass Swamygal Nagar, Lawspet (Post), Puducherry 605008 along with Xerox copies of Application Form No. 0432 in the name of Complainant's wife Tmt. Vijayalakshmi, Hand written paper of Tr.Kishorekumar, Building Plan approval order of Commissioner Tirumangalam Municipality vide No.117/BL/2025/00017, dated 26.02.2025, Doc. No. 8683/2024 of Tirumangalam Sub-Registry in the name of Tmt.N. Vijayalaskhmi and Encumbrance Certificate, Property Tax receipt No. 117/TAX/02/26-27/0000455 and water Tax Receipt Nos. 117/TAX/02/26-27/0000456, 117/TAX/02/26-27/0000452 in the name of previous owner of Plot Tr. Muthiah are herewith enclosed and submitted to the Hon'ble Principal District Judge, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

26/5/2026

(K. Kumaraguru)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Madurai.